<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 06.01.2026

அசல் வழக்கு எண். 70/2024

வா.சா. 1. – சுகுமார், த/பெ. ராஜி முதலியார்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

பிரமான வாக்குமூலம் பத்தி மூன்றில் உங்கள் பாட்டி வள்ளியம்மாள் கடந்த 12.08.1942 விற்பனை பத்திரம் மூலம் கிரயம் பெற்றதாகவும் அந்த சொத்தினை நீங்கள் பாகம் பிரித்துக் கொண்டதாகவும் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த விற்பனை பத்திரம் நீங்கள் இந்த வழக்கில் ஆவணம் ஐந்தாக இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் அந்த விற்பனை பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் பழைய அளவு எனக்கு சரியாக ஞாபகம் இல்லை பூர்வீக சொத்து என்பதால் அளவு தெரியாது. அதனுடைய அளவு 2696 சதுர அடி என்றால் பூர்விக சொத்து என்பதால் அளவு ஞாபகம் இல்லை. கடந்த 24.3.2003 அன்று நீங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்கிறீர்கள் அந்த ஆவணத்தை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன் நீங்கள் அவ்வாறு அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. இந்த வழக்கில் புலவரைபடம் நீங்கள் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான் அது ஆவணம் மூன்றாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்காக நீங்களாக தயார் செய்த எஃப்.எம்.பி வரைபடம் என்றால் நாங்கள் தயார்

செய்யவில்லை. பாகப்பிரிவினை செய்தீர்கள் எதன் அடிப்படையில் செய்தீர்கள் என்றால் நாங்கள் பூர்வீகமாக ஆண்டு அனுபவித்த இடத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டோம் அளவீடு செய்து பாகம் பிரித்துக் கொண்டோம். எந்த சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 138/2 ஆகும். அந்த சொத்தை பாகம் பிரித்துக் கொண்டோம். அந்த சர்வே எண் 1942 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சர்வே எண் ஆகும் அதன் பிறகு பல்வேறு சப் டிவிஷன் செய்யப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் தற்பொழுது உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் தாக்கல் செய்த புல வரைபடத்தில் என்ன பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 790 குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டா எண் 790 இந்த நீதிமன்றத்தில் ஆவணம் நான்காக தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த பட்டாவில் சர்வே எண் 625/5 ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் மற்ற பட்டா எண்களை சொல்கிறீர்கள் அந்த எண்களை தெரியுமா என்றால் 1792,1793,1794 ஆகும். மேற்படி பட்டா யார் பெயரில் இருக்கிறது? அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் என் பெயரிலும் என் அண்ணன் பெயரிலும் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஒரு பட்டா மட்டும் தாக்கல் செய்துள்ளேன். ஒரு பட்டா என்று நீங்கள் சொல்வது பட்டா எண் 790 என்றால் சரிதான். மேற்படி மூன்று பட்டாக்களும் நீங்கள் பாகம் பிரித்து பிறகு வாங்கிய பட்டாவா என்றால் மாங்காட்டில் யாருக்கும் பட்டா கொடுக்கவில்லை கிராம நத்தம் என்பதால் யாருக்கும் பட்டா கொடுக்கவில்லை. மேற்படி மூன்று பட்டாவும் எப்போது வாங்கினீர்கள் என்றால் 2000ற்கு பிறகு வாங்கினோம். அந்த

பட்டாவில் சர்வே எண் 625/5ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிலுள்ள ஷெட்யூல் பி சொத்திற்கும் பாகப்பிரிவினை சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரி இல்லை ஆகவே தான் நீங்கள் பாகப்பிரிவினை பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி இல்லை. ஷெட்யூல்ஏ மற்றும் ஷெட்யூல் பி என்று வழக்கில் இரண்டு பட்டியல் சொல்லி உள்ளீர்கள் அதற்கிடையே நான்கு அடி சந்து உள்ளது என்றால் சரிதான். அது பொது சந்தாக இருந்து அனைவர் அனுபவத்திலும் இருந்தது என்றால் எங்களுக்கு சொந்தமான சந்தாக இருந்தது. நீங்கள் சொல்வது தவறு பிரதிவாதிகள் மின்விளக்கு போட்டு அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியில்லை. ஷெட்யூல் பி சர்வே எண் 625/3 சொத்து சம்பந்தமாக எந்த விதமான ஆவணங்களும் நீங்கள் தாக்கல் செய்யாமல் அதில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்றால் சரியில்லை. எந்த விதமான அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் வழக்கு நீங்கள் தாக்கல் செய்ததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.